00163

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

முகாமைத்துவ பட்டப்படிப்பு (சிறப்பு) நிகழ்ச்சித்திட்டம்

மட்டம் 04

கணிப்பீடு - 2023

**OSU4505: செயற்பாட்டு முகாமைத்துவம்**

நேரம்: இரண்டு (02) மணிநேரம்

---

**திகதி: 13/08/2023** **நேரம்: 09.30 மு.ப – 11.30 மு.ப**

---

அறிவுறுத்தல்கள்:

- நான்கு (04) வினாக்களுக்கும் விடை எழுதுக. எல்லா வினாக்களும் சமனான புள்ளிகளை கொண்டுள்ளன.

---

வினா 1

(a) "செயற்பாட்டு முகாமைத்துவம் என்பது நிறுவனங்களுக்கு மட்டுமல்ல, முழு நாட்டிற்கும் முக்கியமானது". தற்போதைய வணிக அரங்கில் செயற்பாட்டு முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை விளக்குக. (10 மதிப்பெண்கள்)

(b) 10 ஊழியர்களை கொண்ட ஓர் சிறிய ஆடைத் தொழிற்சாலை வைத்திருக்கும் சாமர, ஓர் முயற்சியாளராவார். இந்த சூழ்நிலையை கருத்தில் கொண்டு சட்டை (shirt) உற்பத்தி (தையல்) செயல்முறை தொடர்பான உற்பத்தி முறைகளை (Production Systems) விளக்குக. (15 மதிப்பெண்கள்)

**(மொத்தம் 25 மதிப்பெண்கள்)**

வினா 2

(a) "வெவ்வேறு உற்பத்தி நிறுவனங்கள் வெவ்வேறு உற்பத்தி முறைகளை பயன்படுத்தப்படுகின்றன". சூழலில் நீங்கள் கவனிக்கும் வெவ்வேறு உற்பத்தி முறைகளை/தயாரிப்பு முறைகளை (Production Systems/Manufacturing Systems பொருத்தமான உதாரணங்களுடன் கண்டறிந்து விளக்குக.

(10 மதிப்பெண்கள்)

(b) தாரக என்பவர் உங்கள் பிரதேசத்தில் புதிய துரித உணவுகளை தயாரிக்கும் உணவகம் ஒன்றை ஆரம்பிக்க திட்டமிடுகின்றார். அவர் வியாபரத்தில் வெற்றி பெற மேற்கொள்ள வேண்டிய செயற்பாட்டு முகாமைத்துவ தந்திரோபாயங்களை (Operations Management Strategies பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக. (15 மதிப்பெண்கள்)

**(மொத்தம் 25 மதிப்பெண்கள்)**

வினா 3

(a) "உற்பத்தி நிறுவனறங்களும் (Manufacturing Organizations) சேவை நிறுவனங்களும் (Service – Oriented Organizations தமது உற்பத்தி திறனை (Productivity) அதிகரிப்பதற்காக முயற்சிக்கின்றன". உங்களை ஓர் சில்லறை வியாபாரத்தின் முகாமையாளராக கருதி இலங்கை சில்லறை தொழிலின் உற்பத்தி திறனை கூட்டுவதற்கான வழிகளை சிபாரிசு செய்க.

(10 மதிப்பெண்கள்)

(b) குமார என்பவர் ஒவொன்றும் ரூபா 125 பெறுமதி உள்ள 1000 பான்களை ஒரு வாரத்தில் உற்பத்தி செய்யும் வெதுப்பக உரிமையாளர் ஆவார். இந்த உற்பத்தியினை மேற்கொள்வதற்காக கீழ் தரப்பட்டுள்ள உள்ளீடுகளை குறிப்பிட்ட அளவுகளில் உபயோகிக்கின்றார்:

1kg ரூபா 300 படி 200 kg கோதுமை மா
தொழிலாளர் (Labour Cost) ரூபா 15000
வலு (எரிவாயு மற்றும் மின்சாரம்) ரூபா 10000

மேல் தரப்பட்ட தகவலில் இருந்து பின்வருவனவற்றை கணிக்க.

I. பகுதி உற்பத்தி திறன் (Partial productivity)

II. பலகாரணி உற்பத்தி திறன் (Multifactor Productivity)

III. மொத்த உற்பத்தி திறன் (Total Productivity)

(15 மதிப்பெண்கள்)

**(மொத்தம் 25 மதிப்பெண்கள்)**

வினா 4

(a) நிறுவனங்கள் கிரமமாக திட்டமிடப்பட்ட வசதி அமைப்பை, (Properly Planned Facility Layout) கொண்டு இருக்கும் போது அந்த நிறுவனங்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய அனுகூலங்களை விளக்குக. (10 மதிப்பெண்கள்)

(b) பின்வரும் பதங்களை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

I. வேலை உற்பத்தி (Job Production)

II. தொகுதி உற்பத்தி (Batch Production)

III. பாய்ச்சல் உற்பத்தி (Flow Production)

(15 மதிப்பெண்கள்)

**(மொத்தம் 25 மதிப்பெண்கள்)**